
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1152

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

54

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# பாலைவன ரோஜாக்கள்:
# நாடு வாழ நலிவு தீர, நல்லவர்களின் பணி தொடரும்!

1986-ஆம் ஆண்டு, கலைஞரின் எழுத்தில் வெளிவந்த 'பாலைவன ரோஜாக்கள்' அன்றைய ஆட்சியின் அவலங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்காகவே தயாரிக்கப்பட்ட திரைப்படம். திரைப்படத்தின் நோக்கத்தை, படத்தின் தொடக்கத்திலேயே தோன்றி, எடுத்துக் கூறவும் செய்வார் கலைஞர். குறிப்பாக, பாலைவன ரோஜாக்கள் என அந்தத் திரைப்படத்துக்கு பெயர் வைத்த காரணத்தை விளக்குவார்.

"எழுத்தாளரின் பேனா சிந்துகின்ற மையில் வாய்மை இருக்க வேண்டும். இளைஞனின் போர்க்குரலில் தன்னலமென்னும் போலித்தன மற்ற பொதுவான இலட்சியம் இருக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களின் தொண்டர்களாக இருக்க வேண்டுமே தவிர, மமதை கொண்ட சுயநலவாதிகளாக மாறக்கூடாது - மாறவே கூடாது. அதிகார வர்க்கம் ஆசாபாசங்களுக்கு ஆட்படாமல் நேர்மையான நிர்வாகத்தை வழங்க வேண்டும்" அதை உணர்த்துவதற்கே இந்தப் படம் என வகுப்பு எடுத்திருக்கிறார்.

ஓர் எழுத்தாளனின் பேனாவும், எழுத்தும் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும், அநீதியை எதிர்த்த போரில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபட முடியும், ஈடுபட்டாக வேண்டும் என்பதையும் அந்த உரையில் வலியுறுத்துவார்.

### அரசியல் பிரச்சாரமான வசனங்கள்

படத்தின் கதாபாத்திரங்கள் பேசும் அரசியலும், அன்றைய சூழலில் மக்களிடம் கழகத்தின் பிரச்சாரமாகச் சென்றது. நாயகன் சபாரத்தினம் (சத்யராஜ்) 'நமது நாடு' பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்கும் முன்பு, தன் தாத்தாவைச் (சாருஹாசன்) சந்தித்து வாழ்த்துப் பெற வருவான். அப்போதைய உரையாடலில், ஊடகங்களின் பணி என்ன என்பதை, அவனின் தாத்தா வழி விளக்குவார் கலைஞர்.

"**தாத்தா :** அந்தக் காலத்துல நான் எழுதுன கட்டுரை, தலையங்கம், போட்ட செய்திகளுக் காகப் பல முறை ஜெயிலுக்குப் போயிருக்கேன். உரிமைகளைப் பறிப்பவர்களை ஒண்ணாக் கூடி எதிர்ப்பவன்தான் லட்சியவாதி, நீ அப்படியொரு லட்சிய எழுத்தாளனா இருக்கணும்னு வாழ்த்தி, நான் பயன்படுத்துன இந்தப் பேனாவை என் நினைவா உனக்குக் கொடுக்கப்போறேன், எனக் கூறி பேனாவைப் பத்தி வால்ட்டேர் என்ன சொன்னான் தெரியுமா? என்று கேள்வி எழுப்புவார்

**சபாரத்தினம்:** வாள் முனையைவிட வலிமையானது, பேனா முனைன்னு சொன்னான்.

**தாத்தா:** நீ அதை உணர்ந்த வீரன்கிற நம்பிக்கைலதான் இந்தப் போர்வாள உன் கைல ஒப்படைக்கிறேன்" என பேனவை அன்பாக அளிப்பார்.

கலைஞருக்கும் பேனாவுக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்வதற்கும், எழுத்தின் வலிமையை உணர்த்துவதற்கும். இக்காட்சியில் கலைஞர் எழுதிய வசனம் இன்றைக்கும் காலப் பொருத்தமானது.

### சுதந்திரப் போராட்டத்தில் வ.உ.சி.

சுதந்திரப் போராட்டத் தியாகி தயானந்தரை சபாரத்தினமும் ராணி (நளினி) யும் பேட்டி காணும் காட்சியில், பெண்கள் கிணற்றடியில் தண்ணீருக்குச் சண்டை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

**தயானந்தர்:** ஏமா சத்தம் போடுறீங்க. இங்கே பத்திரிகைக்காரங்க வந்திருக்காங்கல்ல.

**ஒரு பெண்:** எதுக்கு வந்திருக்காங்க?

**தயானந்தர்:** நம்ம நாட்டுக்கு சுதந்திரம் கெடச்சதைப் பத்திக் கேட்க வந்திருக்காங்க.

**பெண்:** ஆமா, பார்த்தா தெரியல சுதந்திரத்தோட லட்சணத்த! குடிக்கத் தண்ணிகூட கெடைக்கல.



**ராணி:** என்ன கொஞ்சங்கூட மேனர்ஸ் இல்லாமப் பேசுறாங்க.

**சபாரத்தினம்:** ஓட்டுப் போட்ட தாய்க்குலம் உணர்ச்சி வசப்படுது. இதுல தப்பென்னம்மா?

**தயானந்தர்:** நீங்க கேளுங்க தம்பி.

**சபாரத்தினம்:** கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாரோட சிறப்பு என்னன்னு நீங்க நினைக்கிறீங்க?

**தயானந்தர்:** வெள்ளக்காரன எதுத்ததுக்காக ரெண்டு ஆயுள் தண்டனை இருபது இருபது வருசம் அதக்கூட ஏக காலத்துல அனுபவிக்கக் கூடாதுன்னு மொத்தமா நாப்பது வருசம்... அந்தக் கொடுமையான தண்டனையைக்கூட அவர் சிரிப்போட ஏத்துக்கிட்டாரு பாருங்க, அதுதான் வ.உ.சி. அதுதான் அவரோட சிறப்புங்கூட.

**சபாரத்தினம்:** அப்படியெல்லாம் தியாகம் பண்ணுனவரு ஜெயில்ல செக்கிழுத்தவரு கடைசி காலத்துல, ஏன் சார் காங்கிரஸ விட்டு வெலகுனாரு?

**தயானந்தர்:** அது வந்து தம்பி, இந்த ஒத்துழையாமை இயக்கம் நடந்தப்ப மகாத்மா காந்திக்கும் வ.உ.சி.க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, கப்பலோட்டிய தமிழன் காங்கிரஸ விட்டு வெலகும்படியா ஆயிருச்சு.

**சபாரத்தினம்:** நீங்ககூட சுதந்திரப் போராட்டத்துல ஒரு பத்துப் பன்னெண்டு வருசம் ஜெயில்ல இருந்தீங்கல்ல சார்?

**தயானந்தர்:** நான் மாத்திரம் இல்ல, எத்தனையோ ஆயிரக்கணக்கான தியாகிகள், தொண்டர்கள் எவ்வளவோ சித்ரவதைகள அனுபவிச்சுக் கெடச்சதுதான் இந்த சுதந்திரம்.

**சபாரத்தினம்:** அப்படி வந்த சுதந்திரம் இப்ப எப்படி சார் இருக்கு?

**தயானந்தர்:** என் கை மாதிரி இருக்கு! என்று பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு இயங்காமல்போன தன் வலது கையைக் காட்டுகிறார்.

அதே போல இறுதிக் காட்சியில் மந்திரியின் ஆட்கள் சபாரத்தினத்தை தீர்த்துக்கட்டத் திட்டம் தீட்டியிருப்பதைப் பற்றி சபாரத்தினத்திடம் சூர்யா (லெட்சுமி) எடுத்துச் சொல்வாள். அதற்கு சபாரத்தினம்,

"எவனோ உழைக்கிறான். எவனோ பொழைக்கிறான். கண்ணீர்த் துளியை, ரத்தத் துளியை, வேர்வைத் துளியை காசாக்கி வரிப்பணமா கொடுக்கிற பாட்டாளி வர்க்கம் ஒரு பக்கம். ஆனா, கூட்டா சேர்ந்து கொள்ளையடிக்கிற அதிகார வர்க்கம் இன்னொரு பக்கம்.

பணமிருந்தா யாரையும் மிரட்டலாம். பணத்தைச் சுருட்டலாம். அந்தப் பணத்தை வச்சுக்கிட்டு ஜனநாயகத்தையே விலை பேசலாம். ஜனநாயத்தின் பேரால சர்வாதிகார ஆட்சி நடத்தலாம். கோடி இருந்தா போதும்மா, இந்த நாட்டுல கேடியும்கூட கடவுளாயிருவான்.





படங்கள் உதவி : ஞானம்

இப்படிப்பட்ட அமைச்சர்களை, அதிகாரிகளை, பணக்கார வர்க்கத்தைப் பத்தித் தெரியுமான்னுதானே என்னைக் கேட்குறே. நல்லா தெரியும். நான் தெரிஞ்சுக்கிட்ட இந்த விசயத்த நாட்டு மக்களும் தெரிஞ்சுக்கணுங்கிற ஒரே காரணத்துக்காகத்தான் இந்தக் காரியத்துல இறங்கியிருக்கேன்" என்று, தனது லட்சியத்தைச் சொல்வான்.

**சூர்யா:** ஓகே சபா, நீங்க தனியாளா பத்திரிகையில எழுதி இந்த நாட்டையே திருத்திடப்போறீங்களா?

**சபாரத்தினம்:** இந்தியாவைத் திருத்துறதுக்காக எழுதலம்மா. இந்தியாவைத் தெரிஞ்சுக்கிறதுக்காக எழுதுறேன்.

இவ்வாறாகப் படத்தின் தொடக்கக் காட்சியிலிருந்து இறுதிக் காட்சி வரை கலைஞரின் அனல் தெறிக்கும் கூர்மையான வசனங்கள் நிறைந்த தனித்துவமான அரசியல் திரைப்படமாக 'பாலைவன ரோஜாக்கள்' காட்சியளிப்பதுடன் படத்தின் இறுதியிலும் மீண்டும் கலைஞர் குரல் ஒலிக்கிறது.

"பாலைவனத்தை சோலைவனமாக்கப் பாடுபடும் புரட்சி ரோஜாக்களை, நெருப்பின் நாக்குகள் விழுங்கிவிடலாம். துப்பாக்கி ரவைகள் அந்தத் தூயவர்களின் உயிர்களைப் பறித்துவிடலாம். அந்த லட்சியப் போர் வீரர்களின் உடல்களை கண்ணீரால் குளிப்பாட்டுவோம். அவர்களது கல்லறைகளை நம்பிக்கை ஒளி வழங்கும் கலங்கரை விளக்கங்களாகக் கொள்வோம். மக்கள் விழிப்படையும் வரையில்தான் மகோன்மத்தர்களின் அட்டகாசம் கொடிகட்டிப் பறக்கும். வாய்மையின் பெருமைதனை வஞ்சகம் வெல்லும். அந்த வஞ்சகம் பொடிப் பொடியாக, மீண்டும் வாய்மையே வெல்லும். நாடு வாழ நலிவு தீர, நல்லவர்களின் பணி தொடரும் - தொடர்ந்துகொண்டே இருக்கும்!"

**...காட்சி விரியும்**

## அ.தி.மு.க. வெறும் கரண்டியை ஆட்டுகிறது!

'திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களுக்கு அடிப்படையாக இருப்பது, அதில் உள்ளூர அமைந்திருக்கும் சமூக மாற்றத்திற்கான நோக்கங்கள்தான். ஆனால், அ.தி.மு.க.வோ, மேலோட்டமாக அவற்றை, 'வெறும் இலவசம்' என்ற கணக்கில் மட்டும்தான் புரிந்துகொள்கிறார்கள் என்பதைத்தான், இந்தத் தேர்தல் அறிக்கைகூட அப்பட்டமாகச் சொல்கிறது' என அறிக்கை விடுத்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி.

'குறிப்பாக, மகளிர் திருமண நிதி உதவித் திட்டத்திற்கு கல்வியை அடிப்படையாக வைத்ததுதான், பெண் கல்வியில் தமிழ்நாட்டின் பெரும் பாய்ச்சலுக்குக் காரணமாக அமைந்தது. ஆனால், அதை வெறும் திருமண நிதி உதவித் திட்டமாக மட்டும் புரிந்துகொள்வது போலத்தான் அ.தி.மு.க. எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறது. அதனால்தான், ஃபிரிட்ஜ் வழங்குகிறோம் என்று 20 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கிய 'டிரெண்டில்' இன்னமும் தேங்கி நிற்கிறார்கள். என்ன செய்ய... உண்மையான சமூக நோக்கம் இருந்தால்தானே, அவை செயல்திட்டங்களாக வெளிவரும்?

கடந்த 2021 தேர்தலில் மகளிருக்கு ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்போவதாக தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளிவந்ததும், 'அது சாத்தியப்படாது - பொருளாதாரம் இடம்தராது' என்று சொன்னவர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள். இன்று அதே எடப்பாடி பழனிசாமிதான் 'மாதத்துக்கு ரூ.2,000 தருவோம் மகளிருக்கு' என்று அறிவிக்கிறார்! அதுமட்டுமல்ல, பலவற்றையும் அறிவித்துள்ளார். கேஸ் சிலிண்டர், அரிசி, பருப்பு, எண்ணெய், பென்சன் அதிகரிப்பு, உழவு மானியங்கள், ஃபிரிட்ஜ், கடன் தள்ளுபடி என எடப்பாடி தருவதாகச் சொல்லியிருப்பதற்கு மட்டுமே ஆண்டுக்கு ரூ.80,000 கோடி நிதி தேவைப்படும். வெறும் கரண்டியை வைத்திருப்போர் எப்படியும் ஆட்டலாம்; ஆட்சிக்கு வரப் போவதில்லை என்றதும், எதையும் சொல்லலாம்!" என்கிறது அவரது அறிக்கை.

## ஃப்ளாஷ்பேக்



### ஒன்றாகக் காணும் வாய்ப்பு!



கோ.சட்டநாதன்

1967-ஆம் ஆண்டில், கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலிருந்தே கழகத்தில் இருக்கிறேன். மாணவர் முன்னேற்றக் கழகம், வார்டு பிரதிநிதி, செயலாளர் எனக் கழகப் பொறுப்புகளில், 1971-ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறேன். தலைவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற என் ஆசை 2015-ஆம் ஆண்டில்தான் நிறைவேறியது. கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், இன்றைய கழகத் தலைவர் அவர்களையும் ஒன்றாகச் சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொண்டது மிகப்பெரும் பேறாகும்.

**- கோ.சட்டநாதன்,**
**14-வது வார்டு அவைத் தலைவர்,**
**நகர கலைஞர் பகுத்தறிவுப் பாசறை, துணை அமைப்பாளர்,**
**சீர்காழி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு... / நல்வருக

### சர் பிட்டி.தியாகராயருக்கு வீர வணக்கம்!

1959, ஏப்ரல் 24-ஆம் தேதி, சென்னை மாநகர மன்றத்துக்குப் பதவி ஏற்கப் புறப்பட்ட கழகத்தினரை வாழ்த்திய பேரறிஞர் அண்ணா, "நம்முடைய தோழர்கள், மாமன்றத்தில் நுழைகிற நேரத்தில் நல்லதோர் மாலையைத் தயாரித்து, நகரசபைக் கட்டடத்துக்கு வெளியே நிற்கிற - தமிழர்களைக் கைதூக்கி விட்ட சர் பிட்டி.தியாகராயர் சிலைக்கு அணிவித்து, அவரைத் தொழ வேண்டும். ஏழைகளான நாங்கள் உங்களை மறக்கவில்லை என வீர வணக்கம் செலுத்திவிட்டு, கடமையாற்ற வேண்டுகிறேன்" எனக் கேட்டுக்கொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900